தெரிவித்துக்கொள்கிறது. இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

36—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1451—திரு. S. ஜெயக்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடித்து, குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 2 பேரூராட்சிகள் குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி, ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 பேரூராட்சிகளான, பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையம், காஞ்சிகோவில், நல்லாம்பட்டி, பள்ளப்பாளையம் மற்றும்

2021 செப்டம்பர் 9]

பெத்தாம்பாளையம் ஆகிய 8 பேரூராட்சிகள் மற்றும் இவ்விரண்டு மாவட்டங்களிலுள்ள 547 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.224 கோடி மதிப்பீட்டிலான கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 92 சதவிகித திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளை விரைந்து முடித்து, இன்னும் ஒரு மாத காலம், அக்டோபர் மாதத்திற்குள்ளாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவனும் தெய்வமுமாய் நின்று, எங்கள் இயக்கத்தை வழிநடத்தும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசியல் ஆசான், தமிழகத்தை வெற்றி நடை போட வைத்த எங்கள் முன்னாள் முதல்வர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியாருக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) கழக ஒருங்கிணைப்பாளர், முன்னாள் துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் வணக்கம். இந்த சீர்மிகு சட்டப் பேரவையின் ஆன்றோர்களுக்கும், சான்றோர்களுக்கும், என்னை மக்கள் பணியாற்றிட வாய்ப்பளித்த பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சண்முகாபுரம் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய என்னை, இந்த அவையில் அமர வைத்த, பெருந்துறை தொகுதியின் தாகம் தீர்த்த வள்ளல் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை உள்ளடக்கிய பெருந்துறை தொகுதியில், கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் அண்ணன்*

எடப்பாடியார் அவர்களால் ரூ.224 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் 30-6-2021-க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம், 72 ஊராட்சிகள், 8 பேரூராட்சிகள், 547 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் பணிகளை விரைவாக முடித்து, பயன்பாட்டுக்குக் கொண்டுவருவீர்களா என்பதை இந்தப் பேரவையின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிலே அதுதான். அடுத்த மாதம், அக்டோபர் மாதத்தில் இப்பணி முடிவடையும். ஆறு மாதங்களுக்கு முன்பு இப்பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். இடையில் ஏற்பட்ட தடங்கலால், நாட்டில் என்ன நடந்தது என்பது உங்களுக்கே தெரியும். கொரோனா நோய்த் தொற்றால் வேலையாட்கள் பணிக்கு வரவில்லை. அதனால் 4 மாதங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 5 இலட்சத்து 47 ஆயிரம் பேர் பயன்பெறும் வகையில், நாள் ஒன்றுக்கு 25.39 எம்.எல்.டி. தண்ணீர் கிடைக்கும் வகையிலான பணிகள் அடுத்த மாதம் முடிவடைந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளையும் இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதுமிருந்து இதுபோன்ற கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஏற்கெனவே திட்டமிடப்பட்டு, ஓரிடத்திலே ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கப்படுகிறபோது வழியோர கிராமங்கள் மற்றும் அதைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளுக்கு அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பலன் தரப்படுவதற்கு, திட்டம் தீட்டப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது விடுபட்ட பகுதியினர், எங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய இலாகா சார்பில் விரைவிலே அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஏனென்றால், நிதி வேண்டும், நிதி இல்லாமல் அதைச் செய்ய இயலாது. இருக்கின்ற நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக விடுபட்ட இடங்களையும் சேர்த்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் காலத்தில் வழங்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***3128—திரு. வி.வி. ராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றத்தில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 11 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத்தவிர 12 பொறியியல் கல்லூரிகளும் மற்றும்